செ.வெ.எண்: 54 நாள்: 19.08.2021

**நாமக்கல் மாவட்டம்**

**மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் நல்லிணக்க நாள் உறுதிமொழியினை அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஏற்றுக்கொண்டனர்.**

--------

ஆண்டுதோறும் ஆகஸ்ட் திங்கள் 20- ஆம் நாள் நல்லிணக்க நாள் கடைபிடிக்கப்பட்டு நல்லிணக்க நாள் உறுதிமொழி ஏற்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்த ஆண்டு (20.08.2021) அன்று அரசு விடுமுறை என்பதால், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நல்லிணக்க நாள் உறுதிமொழி இன்று (19.08.2021) ஏற்றுக்கொள்ளப்பட்டது.

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஸ்ரேயா பி சிங் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், நல்லிணக்க நாள் உறுதிமொழியான ‘‘நான் சாதி, இன, வட்டார, மத அல்லது மொழி பாகுபாடு எதுவுமின்றி, இந்தியாவின் அனைத்து மக்களின் உணர்வு பூர்வ ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் பாடுபடுவேன் என்று உளமார உறுதிமொழி எடுத்துக்கொள்கிறேன். மேலும், எங்களுக்கிடையேயான அனைத்து வேறுபாடுகளையும், வன்முறையில் ஈடுபடாமல், பேச்சு வார்த்தைகள் மூலமாகவும், அரசியலமைப்புச் சட்ட வழிமுறைகளைப் பின்பற்றியும் தீர்த்துக் கொள்வேன் என்றும் இதனால் உறுதி அளிக்கிறேன்.’’ என்ற உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வாசிக்க அனைத்து அலுவலர்களும், பணியாளர்களும் பின்தொடர்ந்து வாசித்து நல்லிணக்க நாள் உறுதிமொழியினை ஏற்றுக்கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.மு.கோட்டைக்குமார் (நாமக்கல்), திருமதி.தே.இளவரசி (திருச்செங்கோடு), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ரமேஷ், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.இளங்கோ உட்பட அரசுத்துறை அலுவலர்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகப்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.